410 410

2802

Publication No. 5.

Bakthi Mahima

2839

or

Krishna Maya

OFFICE OF THE REGISTRAR
21 APR 1937
MADRAS

By

K. KUPPUSAMI,

TINNEVELLY.

Author of Indira the Chaste, Rajaratnam or a Noble Ideal, Veera Abhimanyu, Thukaram Bava, Mohan Leela and Karna appearing in 'Talkie Talk'

All Rights Reserved.

Printed at the

SRI VIDYA PRESS,

Kumbakonam.

1937

பிரசுரம்:—5

பக்திமஹிமா

அல்லது

கிருஷ்ணமாயா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 APR 1937
MADRAS
2802
894.8112

ஆசிரியர் :
K. குப்புஸாமி அய்யர்,
திருநெல்வேலி.

முகவுரை.

இக்கதை முதன் முதல் திருநெல்வேலி சாலிவாடீஸ்வரர் என்ற நெல்லையப்பர் கோவிலில் பிரும்மஸ்ரீ சசிராமய்யர் வாயிலாக இருபது வருஷங்களுக்கு முன்பு சிறு பையனுக இருந்தகாலே கேட்டேன். பின்பு எனது நண்பரும் பக்தி மார்க்கத்தை மிகத் தெளிவாக பாமர ஜனங்களுக்கு போதிக்கும் ஸ்ரீமான் பங்களூர் கிருஷ்ண பாகவதர் கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியார் மடத்தில் 9—12—33-ல் வத்ஸலா கல்யாணத்தில் இக்கதையை ஓர் உப கதையாக உட்புகுத்தியதையும் கேட்டு என் மன ஆவலை இந் நாடக மூலமாக முடித்துக்கொள்ளலானேன்.

15 Reddi Rao Tank East, Kumbakonam 20—2—37. } K. KUPPUSWAMI, ஆசிரியர்.

All Rights Reserved by the Author.

முக்கிய அறிவிப்பு.

இந் நாடக நூலின் சகல உரிமைகளேயும் உடையவர் இதன் ஆசிரியர் Mr. K குப்புஸாமி அய்யர். அவர் கையொப்பமிட்ட உத்தரவின்றி இதை நடிக்கவோ, மொழிபெயர்க்கவோ, வேறு வகையில் அமைக்கவோ முயலுவோர் சட்டப்படி நஷ்ட ஈடு கட்டித்தரவேண்டியவர்களாவார்கள்.

இது விற்பனைக்கல்ல. வேண்டுவோர் ஆறு அணு தபால் பில்லேகளனுப்பிவித்து புத்தகம் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடம், ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

பக்திமஹிமா நாடகபாத்திரங்கள்.

தருமர் பீமன் அர்ஜுனன் நகுலன் சகாதேவன்	...	பாண்டவர்கள்.
துரியோதனன் துச்சாசனன்	...	கௌரவர்கள்.
பீஷ்மர் சத்யவ்ருதர்	...	ஆசாரியர்.
கிருஷ்ணன்	...	ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா.
கர்ணன் சகுனி	...	கௌரவர்களின் ஆப்த நண்பர்கள்.
திரௌபதி	...	பாண்டவர்களின் மனைவி.

கதை நிகழும் இடம்:—குருக்ஷேத்திரத்திலும் அதன் அருகிலுள்ள காட்டிலும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 APR 1937
MADRAS

This humble work is inscribed to the

Beloved Memory of

My Uncle

(Mother's Sister's husband)

MR. C. R. SRINIVASA IYER,

Father's brother of Sir C. P. Ramasami Iyer, K C.I.E.)

From whom I believe,

I derive the inspiration to write.

பக்திமஹிமா

அல்லது

கிருஷ்ணமாயா.

அங்கம் 1—களம் 1.

குருக்ஷேத்திரம்—யுத்த ரங்கம்.

பார்த்தன், ஸாரதி (அர்ஜுனனும் கிருஷ்ணனும்) இருவருமாக காணப்படுகின்றனர்.

அர்ஜுனன்:—(அஞ்சலிபந்தனாய் தேர்த்தட்டில் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்தவண்ணம்), ஸ்ரீகிருஷ்ணா! உபதேசம் எவ்வளவோ செய்யினும் போர் செய், போர் செய், என்ற பல்லவி பாடிக் கொண்டிருக்கிறீர்! நான் எவ்விதம் உமது பக்தர்களை எதிர்ப்பது? உம்மையே வெல்லும் சக்தி எனக்குண்டு. ஆயினும் உமது பக்தர்களை நான் எவ்வாறு வெல்லக்கூடும்? சதா கிருஷ்ண த்யானம், கிருஷ்ணன் சேவை, கிருஷ்ணன் தோற்றத்தையே மனதிற் கொண்ட எனது பாட்டனார் பீஷ்மாசாரியாரை எவ்வாறு எதிர்த்து ஜயிப்பது?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! நீ சொல்வது வாஸ்தவமே பக்த பராதினனைக் காட்டிலும் பக்தனே சிறந்தவன். அவனுக்குத் துணைபுரிய நான் எள்ளளவும் பின்தங்கேன். ஆயினும் சத்யமே ஜெயம் என்பது, பொய்யாய்விடுமா? பற்குனா! கீதை உபதேசம் செய்தேன். இன்னும் மாயை விட்டபாடில்லை. துரௌபதி எப்பேர்ப்பட்டவள் என்பதை நீ அறிவாயா? அவளது பக்திக்கு ஈடாகுமா மற்றவர்களது? ஹே விஜயா! என்னை முற்றும் நம்பினவள் அவள். அவள் முற்றும் மறந்து தன்னையும் மறந்து என்னைச் சரண் புகுந்தவள்? அப்பேர்ப்பட்ட பக்தை உங்கள் பக்கம் இருக்க ஜெயம் எவ்வாறு அவர்களுக்கு உண்டாகும்?

அர்:—கண்ணா! மன்னிப்பீர். "கஷ்ட நஷ்டங்களை நாம் மனோதைர்யத்தாலும் தெய்வபக்தியாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும், மனமாற பிறருக்கு கஷ்டமேனும் நஷ்டமேனும் விளைவிக்கக்கூடாது, உலகத்துக்கு நன்மை செய்துகொண்டே

இருக்கவேண்டும், தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பாவிக்க வேண்டும், உலகப் பயன்களை விரும்பாமல் நித்ய சுகத்தில் ஆழ்ந்திய பின்னரும் உலகத்தாருக்கு நல்வழி காட்டும்பொருட்டு புண்ணியச் செயல்களையே செய்துகொண்டிருக்க வேண்டும்" என்றீர். அப்படி இருப்பின் பாரதப் போருக்குப் பின்னர் உலகம் என்ன சொல்லும்.

கிரு:—என்ன சொல்லப் போகின்றது! உலகமெல்லாம் கடவுள் மயம், கடவுளிடம் திருத மாருத பக்தியால் நித்ய சுகத்தை அடையலாம், எல்லா ஜீவன்களையும் சமமாக பாவிக்கவேண்டும், ஸத்ய விருதத்தால் ஆனந்தத்தை அடையலாம், இல்லறத் தூய்மையால் ஈசத்தன்மை அடையலாம் என்ற மஹத்தான உண்மையை விளக்கும்.

அர்:—அப்படியா! மாயாவி! அறிந்தேன். எல்லாம் தமது அருள். இல்லறத் தூய்மையால ஈசத்தன்மை அடையவும் கூடுமோ?

கிரு:—அர்ஜுனா! ஈசத்தன்மை எனின் நீ என்ன எண்ணுகிருய்? எவ்வித வியாக்யானம் உன்னுடையது?

அர்:—ஈசத்தன்மை எனின் சமபாவம்.

கிரு:—அவ்விதமா எண்ணுகிருய்! நன்று அர்ஜுனா! சாவித்திரி தன் பதிவ்விரதா தர்மத்தால் தன் புருஷன் சத்யவான் மாண்டவனை மீட்டு வரவில்லையா. அவருக்கன்றோ ஆக்கவும் அழிக்கவும் சக்தி உளது. அச் சக்தியைப் பெற்றுளன்றோ?

அர்:—ஆம்.

கிரு:—அவ்விதமே! பதிவிரதா சிரோன்மணி, துரௌபதி இருக்க நீங்களேன் கவலைப்படவேண்டும்? அன்று துரியோதனன் சபையில் தர்மாத்மாக்களிருக்கும் மத்தியில், ரஜஸ்வலையாய் இருந்தவளை, துச்சாஸனன் கூந்தலைப் பிடித்திழுத்துவந்து துகிலுருங்காலை, மானம் அவமானம் எல்லாவற்றையும் நீத்து கைகூப்பி ஏகமனதுடன் என்னிடம் சரண் புகுந்து, ஹே! கிருஷ்ணா! என்று கூவியகாலை என் மனம் அவளிடம் ஈடுபட அவள் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? தர்மாத்மாக்களும் எனது பக்தர்களும் என்ன செய்தனர்? துரியோதனன், பஞ்சபாண்டவர்கள் அரண்யத்திலிருந்து திரும்பி வராமல் சபிக்கப்படட்டும் எனக் கருதி துர்வாஸ மஹாமுனியை அனுப்ப, அக்ஷயப் பாத்திரம் ஓர் முறை உபயோகிக்கப்பட்ட நிமித்தம் ஒன்றும் செய்ய இயலாதே என மனம் நொந்து என்னைத் துதித்து அவள் மனோரதத்தை ஈடேற்றிக்கொள்ளவில்லையா? பார்த்தா! துரௌபதை சாமான்யமானவளல்ல, அவளுடைய பக்திக்கு ஈடுபட்டவன் நான்.

அர்:—ஆயின் நாங்கள் செய்யும் பக்தி அவ்வளவு சிறந்ததல்லவோ?
கிரு:—இதுவா, தற்கிக்கும் சமயம்? கவலையை ஒழி. ஆரம்ப மாகட்டும் யுத்தம். வீண்காலம் போக்கவேண்டாம் பற்குண? காரியத்தில் கண்ணுயிருப்பாய். எல்லாச் செயல்களேயும் கடவுளுக்கென்று சமர்ப்பித்துவிட்டுப் பற்றுதல் நீக்கி எவன் தொழில் செய்கிருனே அவனைப் பாவம் தீண்டுவதில்லை என்ப தையும் மறவாதே.
அர்:—துரௌபதியின் பக்தி மஹிமையை உம் வாயிலால் இன்று நான் கேட்டேன்.
கிரு:—அதையும் காண்பாய்!
அர்:—எல்லாம் உமது செயல்.

அங்கம் 1—களம் 2.

குருக்ஷேத்திரம்—கௌரவர்பக்கம்.

துரியோதனன் பாசறை.

துரியோதனன்:—பீஷ்மர், காங்கேயர், தர்மவிருதர் நம் சைன்யத் தலைமை பூண்டு இன்று ஒன்பது நாட்களாகியும் பஞ்சபாண்ட வர்கள் பஞ்சாய்ப் பறக்காமல் அகோர யுத்தம் செய்துவருகிருர் களெனின் நானென்ன நினைப்பது? பஞ்சபாண்டவர்களுக்கும் எங்களுக்கும் அவர் பிதாமஹரே. ஒரே மனமுடையவராய்த் தான் இருக்கவேண்டும். எங்கள்பால், வாத்ஸல்யமிருப்பதாலா யே எங்கள் சார்பு யுத்தம்செய்ய ஒத்துக்கொண்டதுமன்னியில் ஸேனதிபதியாகவுமிருந்து வருகின்ருர். ஜெயமோ, அபஜெய மோ அவரைச் சார்ந்திருப்பினும், அப்பாண்டவர்களை ஒழிக்க வேண்டுமென்று என் மனம் நாடுகிறது. அவரை ஸேனதிபதி யாக்கலாமோ கூடாதோ என என் மனம் முதலில் ஊசலாடியது. கர்ணன் தூண்டுதலினுலும் மற்ற ஆருயிர் நண்பர்களின் வாக்கை தட்டி நடக்க மனம் வராததினுலும், உண்ட வீட்டிற்கு இரண்டு நினைக்கமாட்டாரென முற்றும் நம்பியே பிதாமஹரான பீஷ்மா சாரியாரை அப் பொறுப்புள்ள பதவிக்கு நியமித்தேன். ஆஹா! ஒன்பது நாட்களாகியும், இன்னும் அப்பாண்டவர்கள் மடியாமல் யுத்தமும் அகோரமாக நடந்துவருகின்றது. என் செய்யலாம்? போரை முடிக்கும் மார்க்கம் தேடவேண்டாமா? எனது பாட்டனுர் தனது கடமையை மறந்து சத்துருபக்ஷம் வாத்ஸல்ய முடையவராயிருப்பாரா? அப்படியாயின் அவர் செய்வது தகாதெனப் பழித்து அவரது கடமையை ஞாபகமூட்டவேண்டி யதே. கர்ணனும் ஏதோ மனேவியாகூலமடைந்து பீஷ்மரின்

வாக்கினுல் தாக்கப்பட்டு ஆயுதமெடுத்து யுத்தம் செய்யாது வாளாயிருக்கின்ருன். அவன் சுத்தவீரன் போரில் நிகரற்றவன். அர்ஜுனனுக்கு மேலானேன். அவனும் சும்மாவிருத்தல் அழகன்று. ஆகவே பீஷ்மர் பாண்டவர்களை வேருேடு அழிக்கவோ அல்லது ஒழியவோ மார்க்கம் செய்யவேண்டும்.

பீஷ்மரே! இன்னும் எந்நாள் கார்த்திருப்பது? யுத்தரங்கத்தில் வாத்ஸல்யத்தைக் காண்பிப்பது சுத்த க்ஷத்திரியர்களுக்கு அழகா? நன்று நன்று உமது பிரதாபம்! யாரடா வெளியே இருப்பது.

ஓர் சேவகன் வந்து அடிபணிந்து நிற்க

இச்சமயத்தில் அதுவும் யுத்தரங்கத்தில் நாம் ஆலோசனை செய்யவேண்டிய நண்பன் கர்ணனே; ஆகவே அவனைத் தருவிப்போம்.

(பிரகாசமாய்)

அடே! சேவகா கர்ணனை நான் அழைத்துவரச் சொன்னதாக சீக்கிரமே அழைத்துவா.

சேவகன்:—அப்படியே

மரியாதையுடன் சென்று கர்ணமஹாராஜனுடன் பிரவேசிக்கின்ருன்

கர்ணன்:—என்னையா துரியோதனமஹாராஜன் அழைத்துவரச்சொன்னது? அதுவும் அதிவிரைவில்? காரணம் யாதாகிலும் கூறினுரு? சொல் சீக்கிரம்.

சேவ:—ஒன்றும் கூருது அதிவிரைவில் அழைத்துவரச் சொன்ஞர்.

(தனிமை)

கர்:—அப்படியா! எக்காரணமாயிருக்கலாம்! இன்று ஒன்பதாவது நாள் போர் முடிந்துவிட்டது. சூரியனும் மலைவாயினுட்பிரவேசித்துவிட்டான். பிதாமஹரான பீஷ்மர் சளையாது பாண்டவர்களுடன் போர்புரிந்து வருகின்ருர். ஆகவே துரியோதனனுக்கு என்ன புதிய யோசனை தோன்றியிருக்கும்? அப்படி யோசனையிருப்பின் சகுனியல்லவோ அதற்கேற்றவன். நானென்ன அவனுக்கு சொல்லக்கூடும்? எதற்கும் அவனை நேரில் கண்டு கேட்போம்.

துரியோதனன் இருப்பிடம் பிரவேசித்து

நண்பா! யாது காரணம்பற்றி என்னை அவசரமாகத் தருவித்தது? முன்பின் யோசியாது யாதாயிருப்பினும் கூறவேண்டும்.

துரியோதனன்:—கர்ணு! நான் இச் சமயத்தில் என்ன சொல்லப் போகிறேன். போர் தொடங்கி ஒன்பது நாட்களாகியும் நமது

பிதாமஹர் பீஷ்மர் சேனாதிபத்யம் பூண்டும் இன்னும் பாண்டவர்களை ஒழிக்காது சும்மா இருக்கின்றனரே, யுத்தமும் நீடிக்கின்றதே, என்ற எண்ணம் மேலிட உன்னிடம் என் எண்ணத்தை வெளியிடவே தருவித்தது. நீ உற்ற நண்பனானதால் என் மனோரதம் ஈடேறும் மார்க்கம் தேடுவாய் என்பது நிச்சயம். போர் ஒழியும் மார்க்கம் சொல்வாய் கர்ணா.

கர்:—ஹே துரியா! ஓர் காரியம் செய்யுமுன் நன்கு ஆராய்ந்து செய்யவேண்டும். அப்படிச் செய்யப்புகுந்தபின் ஒரே மனத்தினனாய் அக்காரியம் முடியும் மார்க்கம் தேடவேண்டும். காரியத்தில் தலையிட்டுக்கொண்டபின் ஏங்கி நிற்றலும் சம்சயித்தலும் சஞ்சலப்படுதலும் வீரனுக்கழகன்று. ஆகவே துரியோதனா நாம் போர் செய்ய துவக்கி ஒன்பதுநாட்களானபின் உன் மனம் ஊசலாடக் காரணம் என்ன?

துரி:—பிதாமஹர் யுத்தத்தை முடிக்க வழிதேடாது பாண்டவர்களிடம் அன்புகொண்டிருப்பதே எனக்கு சஞ்சலத்தை விளைவிக்கின்றது.

கர்:—அப்படியா, துரியோதனா! பீஷ்மர் பாண்டவர்பால் அன்புகொண்டவர் என்பது வாஸ்தவம். மேலும் அவர் சத்திய விருதரன்றோ! அவர் மேற்கொண்ட காரியத்தைக் கண்ணும் கருத்துமாகவே செய்துவருவார். அவர் எவ்வளவுதான் கோரமாக யுத்தம் புரியினும் பாண்டவர்களையும் அக் கிருஷ்ணனையும் கொல்ல மனம் அவருக்கு வராது.

துரி:—பின் பாரதப்போருக்கு முடிவு இல்லை!

துச்சாஸனன் பிரவேசித்து இருவருக்கும் அடிபணிந்து

துச்:—அண்ணா! ஏன் கவலைப்படுகிறீர்? விட்டொழியும் நாம் சுத்த க்ஷத்திரியர்களன்றோ? அப் பிதாமஹர் கையில் ஆயுதம் ஏந்திப் போர் புரியும் வரை பாரதப்போர் முடிவுபெறாது. ஆகவே அவரை நாம் வற்புறுத்தி பாண்டவர்களை மாய்க்கும்படி சத்தியம் வாங்கவேண்டும்.

துரி:—தம்பி நல்ல சமயத்தில் வந்தனை. நீ அல்லவா எனது அனுஜன். எங்கே சகுனி மாமா.

கர்:—இச்சந்தர்ப்பத்தில் அவரும்வரின் மிக்க நலமே. எங்கே அவரைக் காணோம்?

துச்சாஸனன்:—அங்கதேசாதிபதி உமது நிகரற்ற வீரச்செயல்களைக் காணும் பாக்யம் இன்னும் இந்த குருக்ஷேத்திரம் பெறவில்லை, சீக்கிரமே அந்நாள் வரும். அப்பொழுது உமது திறமையைக் காண்பித்து நற்பெயருடன் சுத்த க்ஷத்திரியனாக விளங்குவீராக.

சகுனி பிரவேசிக்கவும் அனைவரும் மரியாதை செய்கின்றனர்.

சகுனி:—மருமகனே! எல்லாம் கேட்டறிந்தேன். வீணில் துயருறாதே. துரோணர் கிருபர் முதலியோர் எங்கே சென்றனர்? கர்ணனென்ன சாமான்ய பேர்வழியா? சல்லியனின் திறமை யாருக்குக் கிட்டும்? பீஷ்மர் பெரியார் சத்யசந்தர். ஸேனாபதித்வம் வகிப்பதால் மற்றவர்கள் முன்யோசனை கூறாது சும்மாயிருக்கின்றனர். பீஷ்மரை அணுகி, துரியோதனா, பாண்டவர்களை ஒழிக்குமாறு, சத்தியம் செய்யச் சொல். அவர் இணங்கின் நம் கவலைகளெல்லாம் வீணே

துச்:—அவரை நல்ல வார்த்தைகளால் கேட்பதைவிட நன்றி கெட்டவர் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பவர் சத்துருவினிடம் பக்ஷம் காட்டும் துரோகி என நிந்திப்பின் நலமே. இதுவே அதற்கு வழி.

சகு:—அப்படி சத்யம் செய்யும் பொழுது கிருஷ்ணனாணை என்ற வாக்கியம் தருவி. அச்சத்தியத்தில் நன்றாகக் கட்டுப்பட்டவராய் விடுவார்?

கர்:—மாமா உம்மாலாகாதது முண்டோ? நீரல்லவோ இப் பாரதப் போருக்கு மூலாதாரம். பீஷ்மர் கிருஷ்ண பக்தன் என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறீரே. ஆஹா உமது மதி எல்லாம் துர் உபதேசங்களில் செல்கின்றதே. இவைகள் நன் மார்க்கங்களின் செல்லுமாயின்?

மாமா! பீஷ்மர் சபதம் செய்யின் கிருஷ்ண பரமாத்மா அவர் வாக்கு வீணாகாது மெய்ப்பிக்கமுன்வருவாரென்ற எண்ணமோ உம்மை இவ்விதம் சொல்லத்தூண்டிற்று. சரிதான். இது நல்ல யோஜனையே. அரவக் கோனே மாமா சொற்படியே நட. பாண்டவர்களை சீக்கிரமே ஒழிப்பதாக கிருஷ்ணன்மேல் ஆணை இடச் சொல். உமது மனோரதம் ஈடேறும்.

துரி:—அப்படியாக பாரதப் போர் முடியுமா?

கர்:—போர் முடிந்துவிடும்.

துச்:—பேஷ்! அண்ணா! நமது மாமாவுக்கு எவ்வளவோ கடமைப் பட்டுள்ளோம். போர் முடியட்டும் அவருக்குத் தக்க மரியாதைகள் செய்வோம் அண்ணா சீக்கிரம் ஒழிக்குமாறு கேளாதேயும். நாளை சாயங்காலத்திற்குள் எனவே சத்யம் செய்யச் சொல்லும்.

துரி:—அவ்விதமே பிதாமஹரைக் கேட்கின்றேன். மாமா போய் வரட்டுமா? உமது ஆசிதான் எனக்கு முக்கியமாக வேண்டும். கர்ணா! மித்ரா! போய் வருகின்றேன். பீஷ்மராலன்றோ நீ

வாளெடுத்துப் போர்செய்யாது இருக்கின்றாய் துச்சாசனா உன் னிருப்பிடம் சென்று கவலையற்று நித்திரை புரி. பெரியவர்க ளிருகக் நமக்கென்ன குறை. போய்வருகிறேன் மாமா. மித்ரா! அனுஜா!

கர்:—பெரியாரிடம் அவமரியாதையாகப் பேசாதே. வினயத்துட னேயே நீ கேட்கவேண்டியதைக் கேள்.

துரி:—அப்படியே.

போகிறான்.

துச்:—தன் கடமையை மறந்து சத்துருபக்ஷம் வாத்ஸல்யமுடைய ஓர் வீரனுக்கு அதுவும் க்ஷத்திரியனுக்கு மரியாதை வேறா? கர்ணா! வெகு லக்ஷணம்.

கர்:—ஹே! துச்சாசனா! உனக்கென்னடா தெரியும் அவர் மகத் துவம்? சிறியவன் அகங்காரி, வாய் பேசாது மூத்தோனிட்ட கட்டளைப்படி நட.

சகு:—நேரமாகின்றது செல்வோம் வாருங்கள்.

(அனைவரும் போகின்றனர்.)

அங்கம் 2—களம் 3.

பீஷ்மர் ஓர்புறமும், கிருஷ்ணார்ஜுனர், ஓர்புறமும், சண்டையிடுகின்றனர் ஒன்பதாவது நாள்.

பீஷ்மர்:—அர்ஜுனா உன்னாலானதைப் பார்த்துக்கொள். இதோ வந்துவிட்டேன். உன்னுடன் போர் புரிய.

ஓர் அம்பு வந்து பீஷ்மரின் வில்லை அறுத்து விடுகிறது.

அர்ஜுனா! மெச்சினேன் உனது திறமையை. நீதான் வில்லாளி. உனக்கு நிகர் எவரிருக்கின்றார்? எல்லாம் அந்த மாயாவியின் வைபவம் அல்லவா? ஹே! கிருஷ்ணா! சரணம்.

அர்:—கிருஷ்ணா! அநியாயமாய் என்னைக்கொண்டு யுத்தம் புரியும் படி செய்கின்றீரே இது உமக்கடுக்குமா? எனது மூதாதை அல்லவா பீஷ்மர். எனக்கு மனம் தாளவில்லை. என்னை மன்னிப்பீர் என் மனம், அவருடன் போர் புரிய இடம் கொடுக்கவில்லை.

கிரு:—அர்ஜுனா! என்ன, மறுபடியும் திருப்பிக்கொண்டனையா? விராட நகரத்தில் மாடுபிடிச் சண்டையில் நான் பீஷ்மரைக் கொல்வேன் என சபதம் செய்தனையே. அதை மறந்து விட்டனையோ? அல்லது கீதாபதேசம்தான் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் ஆய்விட்டதோ? பார்த்தா! உன்னை நீ அறியாயோ?

அர்:—என்னை மன்னிப்பீர், க்ஷமிப்பீர். என் மனம் வலிவு குன்று கின்றது.

கிரு:—அப்படியாயின் பீஷ்மரைக் கொல்வது யார்? அவரை எவன் எதிர்க்கக்கூடும்? சரி உன் மனப்படியே நடப்பாய். என்னை இனி தொந்திரவு செய்யாதே. ஒன்றும் தடை செய்யாதே.

வெறிகொண்டவர்போல் கடிவாளத்தை எறிந்துவிட்டு கையில் சக்கரத்துடன் புறப்படுகிருர்.

அர்.—ஹே! கிருஷ்ணா! ஆபத்பாந்தவா? என்னைத் தனிமையில் விட்டுச் செல்வது அழகா? இற்குத்தான் எங்களுக்குச் சஹாயமாக வந்ததோ? எங்கு அவசரமாக ஆயுததாரியாய் போர்க்களத்தில் செல்கிறீர்? உம்மை நம்பினவர்கள் நாங்கள். எங்களை அகதியாய் விடாதீர்.

கிரு:—சொன்னதையும் செய்யமாட்டாய். செய்யவும் விடமாட்டாய் இதென்ன பிராணசங்கடம்? விலகிப் போ. எனக்கு வழிவிடு. பீஷ்மரைக் கொன்று திரும்புகின்றேன்.

தேரை விட்டு இறங்கி பீஷ்மரை நோக்கி வேகமாக ஓடிவருகிருர்.

பீஷ்:—(கிருஷ்ணன் சக்கிரத்துடன் ஓடி வருவதைக் கண்டு பாணம் முதலியவைகளை எறிந்துவிட்டு அஞ்சலிபந்தராய்) ஹே! கிருஷ்ணா! பக்தவத்ஸலா! கிருதார்த்தனானேன், சீக்கிரமே உன் கையாலேயே நான் இறக்கட்டும். இதைவிட நான் எவ்வாறு என் ஜென்மாவை விடுவது? விஸ்வரூபம் காட்டினீர். அது பெரிதல்ல. என்னிடம் அந்தரங்க பக்தியும் கொண்டிருப்பீர். அதுவும் பெரிதல்ல. என் உயிரை நீரே எடுத்துக்கொள்ளின் எனது ஆத்மா சாந்தநிலை அடையும். அப்பாக்யம் இப்பாவிக்கு. இத்துராத்மாக்களின் சோற்றை உண்டு அவர்கள்பால் சண்டையிடுவோனுக்கு, கிட்டுமோ? ஏ! கிருஷ்ணா!

அர்ஜுனன் பின்தொடர்வதைக் கண்ணுற்று

தீர்ந்தது? அர்ஜுனன் சமாதானம் செய்து திருப்பிவிடுவான். நாம் நினைத்தது ஸ்வப்பனமே!

அர்:—(கிருஷ்ண பகவானின் பின் ஓடோடி வந்து அடி பணிந்து) கிருஷ்ணா! இதென்ன அவசரம்? எங்காவது ஜகத் கர்தா வாக்குப் பிரளலாமா? அதை நான் எவ்வாறு கண்டு சஹிப்பது. நீர் துரியோதனாதியருக்குச் சபதம் செய்து கொடுத்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளும். ரணகளத்தில் ஆயுதமெடுத்துப் போர் புரியேன் என்றீரல்லவா? அப்படியிருக்க பீஷ்மரை சக்கிரத்துடன் கொல்லப் புறப்பட்டு விட்டீரே. இது தகுமா? உலகம் நிந்தியாதா?

கிரு:—போதும் அர்ஜுனா உனது பிரசங்கம். எனது பக்தர்கள் சத்ய சந்தர்கள் ஜெயிக்காது துராத்மாக்கள் வெற்றிபெறின் உலகம் என்ன சொல்லும்? அர்ஜுனன் பேடிபோல் ரணக்களத்

अनपेक्षः शुचिर्दक्ष उदाशीनो गतव्यथः।
सर्वारम्भपरित्यागी यो मद्भक्तः स मे प्रियः ॥

எதனையும் எதிர் பார்த்தலின்றித் தூயோனாய், திறமுடையோனாய்ப் பற்றுதலற்றவனாய் கவலை நீங்கியவனாய் எல்லா ஆடம்பரங்களையும் துறந்து பக்தி செய்வோனே எனக்கினியவன்.

தில் நிற்பதைக் காண சகியாத கிருஷ்ணன், அவன் பக்தன் மானத்தைக் காப்பாற்ற அவன் பொருட்டு தன் பிரதிக்ஞையையும்மீறி நடந்தானென்றுதானே சொல்லும்! இவ்வவச் சொல் என் பக்தன்பால் பொறுக்கத் தயார். ஆனால் துராத்மாக்கள் வெற்றிபெற்று அதர்மம் மேலோங்க நான் சம்மதியேன். விடு என் காலை.

காலை உதற

அர்:—(கெட்டியாய்ப் பிடித்தவண்ணம்) நான் விடமாட்டேன். நீர் வாக்குப் பிரள நான் சம்மதியேன். திரும்புவீர் ரதத்திற்கு.

கிரு:—நான் திரும்பின்?

அர்:—நடக்கிறபடி நடக்கட்டும்.

கிரு:—நான் திரும்ப வேண்டுமென்றால் நீ மனத் தளர்ச்சியடையாது பிதாமஹருடன் சண்டையிட்டு விராட நகரில் சபதம் கூறியதை நிறைவேற்ற வேண்டும்.

அர்:—ஆகவே எனது பிதாமஹரை நானே கொல்ல வேண்டுமோ?

கிரு:—உன்னையன்றி வேறொருவரும் அவரை அணுக இயலாது.

அர்:—பீஷ்மரின் உயிரை நீக்க ஏற்பட்டவன் அர்ஜுனனோ?

கிரு—எத்தனை தரம் சொல்வது வீண் மாயைக்குள்ளாகாதே. கொல்வதும் நீயல்ல கொல்லப்படுவதும் அவனல்ல எல்லாம் நானே.

அர்:—சரி அப்படியே ஆகட்டும். இப்பொழுது நீர் நடத்திய நாடகம் என்னை என் கடமையைச் செய்ய தூண்டத்தானே.

கிரு:—இவ்வளவுடன் முடிந்ததா? வா, அர்ஜுனா! உனக்காக நான் படும்பாடு. ... ...

அர்:—எனக்காக என்ன பாடுபட்டுவிட்டீர். நீர் என்னை உமது பக்தன் என்று நினைத்திருப்பின் இப்பாடெல்லாம் உமக்கு ஓர் பொருட்டா?

திரும்பவும் தேரிலேறி யுத்தம் தொடங்குகின்றனர்.

அங்கம் 3—களம் 1.

யுத்தரங்கம்.

பீஷ்மரின் கூடாரம்

பீஷ்:—நானின்று யுத்தத்தில் நடந்ததைஎன்னென்று சொல்வேன்? அப்பரந்தாமனே என்னுயிரைத் தனது சக்கிராயுதத்தால் வாங்க ஓடிவந்த காரணம் யாதாக இருக்கக்கூடும்? திடீரென அவருக்கேன் கோபமூண்டிருக்கவேண்டும்? ஒருக்கால் அர்ஜுனன் மனத் தளர்வு கொண்டிருப்பானோ? அவனை உற்சாகப்

படுத்த இது ஓர் சூழ்ச்சியோ? இருக்கும் கபட நாடக சூத்திர தாரியன்றோ கிருஷ்ணன். அவன் மாயையை யாவர் இவ்வுலகில் கண்டவர். நான் எல்வளவுதான் கோர யுத்தம் செய்தும் பாண்டவர்களை ஜயிக்க முடியுமா? எங்காவது தர்மத்தை அதர்மம் வெல்லுமா? பாண்டவர்களோ அப்பரம்பொருளின் சஹாயத்தைப் பெற்றவர்கள். அவர்கள் நிச்சயம் அபஜெய மடையார்கள். மடையர்கள் துற்குணமுள்ளவர்கள் என்ன சொல்லியும் கேளாத பிடிவாத குணமுள்ள கௌரவர்கள்பால் தான் தோல்வி. இவர்களும் நாசமடையவே போகின்றார்கள். என் கடமையை இதுகாரும் நின்றுவந்த சோத்துக் கடனை ஒழிக்கவே இவர்கள்பால் சேனாதிபத்யமும் வகிப்பது.

துரியோதனன் வருவதைக் கண்ணுற்று

அரவக்கோனே வருக! எது தற்சமயம் என்னை நாடி வந்தது? உனக்கென்ன ஆகவேண்டும். சீக்கிரமே உரைப்பாய்.

துரி:—ஆசாரியரே இன்னும் எந்நாள் வரை சத்ருவினிடம் வாத்ஸல்யம் காண்பிப்பது? இது உம்போன்ற பெரியோர்க்கழகா? உம்மை முற்றும் நம்பியன்றோ எங்கள் உயிரையும் மான அவமானத்தையும் தங்களிடம் ஒப்புவித்தோம். அப்படிப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஏனோ எங்கள்பால் அசிரத்தையாயிருக்கின்றீர்?

பீஷ்:—துரியோதனா! வீணில் குறை கூறாதே! பாண்டவர்கள் அசகாய சூரர்கள். சத்யத்திற்காக உயிரைவிட முன்வருவோர், மேலும் கிருஷ்ண சகாயம் பெற்றவர்கள் அவர்களை வெல்வது எளிதல்ல.

துரி:—ஆஹா! பீஷ்மரே! அறியாமற் போனேன் இதுவரை. நீர் உண்ட வீட்டிற்கு இரண்டு நினைக்கும் துராத்மா என்பதை எண்ணவே இல்லை. நீர் ஓர் சுத்த க்ஷத்திரியர். சண்டையிட அஞ்சி பகைவரை சிலாகிக்கும் பேடியா? ஆஹா விஷத்தை அடக்கிக் கொண்டு இருக்கும் கிருஷ்ண ஸர்ப்பமென தெரிந்து கொண்டேன். பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்த கதையாயிற்றே! பீஷ்மரே! நீர் பெரியீர், சத்யவிருதர், என சொல்லிக் கேட்டு மனமகிழ்ந்தேனே. அதற்கு நல்வாக்கு சொல்லுகிறீர். இதையேன் முன்பே என்னிடம் கூறி உங்கள் பக்கம் நான் சண்டையிடமாட்டேன் பாண்டவர்பால் பக்ஷமுள்ளவன் எனக் கூறி எங்களை விட்டுப் பிரிந்து போயிருக்கலாகாது. எங்களுடனேயே வசித்து வந்தவர் எங்களை விட்டு மனம்மாறி சத்துருபக்ஷம் சேரமாட்டீர் என எண்ணியன்றோ உம்மை எங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டது. வில்லாளிகளில் சிறந்தோர்

எங்கள் பக்கம் குறைவா? அவர்களை லக்ஷியம் செய்யாமல் உம்மை சேனாதிபதி யாக்கினதற்கும் நல்ல பஹுமானம் செய்தீர்.

பீஷ்:—துரியோதனா! என்னவாயிற்று இப்பொழுது? நான் நியாயத்தைச் சொன்னேன். உங்கள்பால் சண்டையிடேன் என எப்பொழுதாவது கூறினேனா? அல்லது சத்ருபக்ஷம் வாத்ஸல்ய முள்ளோனாய்ச் சண்டையிடுகிறேன் என்றேனா? ஏனோ உனக்கிந்த சந்தேகங்களெல்லாம்.

துரி:—பிதாமஹரே! நீர் சுத்த க்ஷத்திரியர் என்பதை அறிவேன். நீர் இன்று யுத்தரங்கத்தில் ஆயுதங்களை எறிந்துவிட்டு கிருஷ்ணன் உம்மைக் கொல்ல வந்த தருணம் சண்டை யிடாமல் சும்மா இருந்தீரே? அதுவே எங்கள் மனதைக் கலக்கியது. அதுவே எனது துயரத்திற்கும் காரணம்.

பீஷ்:—நன்கு கூறினை துரியோதனா! முன்பே நீ கிருஷ்ண பகவானை சகாயத்திற்கு அழைக்கச் செல்ல அவர் உன்னிடம் கூறியது ஞாபகமிருக்கிறதா? நிராயுதபாணியாய் சண்டை செய்யாமலிருக்கும் நான் வேண்டுமா அல்லது சைன்யம் வேண்டுமா என்றாரே? அப்பேர்ப்பட்ட வாக்குக் கொடுத்த கிருஷ்ண பரமாத்மாவே வாக்குமீறி ஆயுதமெடுத்து யுத்த களத்தில் என்னைக் கொல்லவரின் நானேன் சண்டையிட வேண்டும்? அவர் ஓர் அநீதி செய்யின் உலகமே நசித்துப் போய்விடாதா துரியோதனா? இது உனக்குத் தெரியததன்றோ. மற்றுமோர் முறை கூறுகின்றேன் கேள். நான் உன் பக்கமே சண்டைபட்டு இறப்பேன், என்பதை முற்றும் நம்பு இனி கவலை வேண்டாம். தைரியமாய் போர்புரி. என்ன நாம் செய்த போதிலும் ஜெயம் அவர்கள் பக்கம்தான், துரியோதனா!

துரி:—பீஷ்மரே! அடியேன் செய்த குற்றத்தை மன்னிப்பீர். ஒன்பது நாட்கள் அகோர யுத்தம் நடந்தது. லக்ஷக்கணக்காக இருதிறத்திலும் மாண்டனர். காயம்பட்டு விழுந்த பேருக்கு அளவேயில்லை. இன்னும் எவ்வளவு நாட்கள்தான் யுத்தம் நடக்கவேண்டும்? சீக்கிரமே முடிக்க வேண்டாமா? அப் பஞ்சபாண்டவர்கள் ஒழிந்தால் யுத்தம் தானாகவே முடியும் அன்றோ?

பீஷ்:—துரியோதனா! உனது எண்ணம் வீண். எனது காலமும் நெருங்கிவிட்டது நீ உன் மனம்போல் நடத்திக் கொள்ளலாம்.

துரி:—அப்படி எங்களை அகதியாய் விடாதீர் நீர் மனம் வைத்தால் ஆகாத காரியமும் இவ்வுலகிலுண்டோ. ஆகவே நீர் எவ்விதத்

திலும் நாளை சாயந்திரத்துனுட் பஞ்சபாண்டவர்களை ஒழிக்க வேண்டும். இதையே பிரார்த்திக்கின்றேன்.

நமஸ்கரிக்கின்றான்.

நீர் அவ்விதம் உமது கிருஷ்ணன் மேல் ஆணையிட்டாலன்றி நான் உமது பாதாரவிந்தங்களை விடமாட்டேன்.

பாதங்களை கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகிறான்.

பீஷ்மர்:—சரி! நமது காலமும் நெருங்கிவிட்டது. எனது மரணத்தின் வழியை நானே என் வாயிலாக பாண்டவர்களுக்குச் சொல்லவேண்டும். அவர்களும் இதுவரை என்னிடம் வந்து கேட்கவில்லை. இப்பொழுது இவனுக்கு, இத் துராத்மாவுக்குச் சத்யம் செய்துகொடுப்பின் அவன் பெருமைபாராட்டிக் கொள்ளுபவனுகையால் நாளை சாயங்காலத்திற்குள் பீஷ்மர் பாண்டவர்களைக் கொல்வதாக சபதம் செய்திருக்கின்றார் எனச் சொல்லி மகிழ்வான். கிருஷ்ண ஸஹாயம் பெற்ற பாண்டவர்கள் காதிலும் விழும். அவர்களுக்கு முன்னமேயே அவர்கள் எனது மரண உபாயத்தைக் கேட்பின் நான் சொல்லுவதாகவும் வாக்களித்திருக்கிறேன். அக் கபட நாடக சூத்திரதாரி எவ்வித உபாயமும் செய்து நம்மிடம் வந்து அறிந்து செல்வான். நான் செய்த பிரதிக்ஞை என் உயிர் நாளை சாயந்திரம் வரை இருந்தாலன்றோ பூர்த்தியாயிற்று இல்லையா என யோசிக்கப்படவேண்டும். ஆகவே சோற்றுக் கடனை ஒழிக்கவே இவனுக்குப் பிரமாணமும் செய்வோம்.

துரியோதனு! கேள் சாவதானமாக. நான் நாளைய சூரிய அஸ்தமனத்திற்குள் பாண்டவர்களை வீழ்த்துகின்றேன். இது சத்யம். துரியோதனு! எந்த கிருஷ்ணமீது அளவிலாத பக்தி எனக்குண்டோ அவன்மீது சத்யம் செய்கின்றேன் அப்படி முடியாவிட்டால் நான் இறந்திருப்பேன் என அறிவாய். போதுமா மூத்தோனே.

துரி:—எல்லாம் உமது ஆசிர்வாதம் என மனம் நிம்மதி அடையும் நாள் என்றாளோ?

பீஷ்:—அடே! அஹங்காரம் நீங்கின் பரமாத்மா விளங்குவாரடா! அப்பொழுது சாந்தி தானுகவே ஏற்படும்.

துரி:—போய் வரட்டுமா! விடையளிப்பீர்.

பீஷ்:—அப்பா குழந்தாய் போய்வா உனக்கும் நலமுண்டாகட்டும்.

துரியோதனன்:—(போய்க்கொண்டே) ஜெயித்தேன் விரோதிகளை சாந்தியடையும் மார்க்கத்தையும் கண்டுகொண்டேன்.

போகிறான்,

அங்கம் 3—களம் 2.

குருக்ஷேத்திரம்.

பாண்டவர் படைவீடு

தர்மர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் முதலியவர்கள் ஆலோசித்தவண்ணம் நிற்கின்றனர்.

தர்மர்:—ஸஹாதேவா! நீ கூறியது உண்மைதானா? இன்னும் ஓர் முறை கூறுவாய் நீ கேட்டதை.

ஸஹாதே:—அண்ணா! நான் திருப்பித் திருப்பிச் சொல்லின் என்ன ஏற்படப்போகின்றது. அவர் வாக்கு வீணாகாதன்றோ?

பீமன்:—அதிருக்கட்டும். நீ கேட்டதை விரைவினில் கூறுவாய்?

அர்ஜுனன்:—இளையோனே! ஏன் நடுக்கம்? உள்ளதை உள்ளவாறு சொல்? யார் விதியை யார் தடுக்கக்கூடும்? நடப்பது நடந்தே தீரும். க்ஷத்திரிய குலத்தில் பாண்டுவின் மைந்தனாக பிறந்தபின் எதற்கும் நாம் தயாராயிருக்கவேண்டும். எங்கே கிருஷ்ணன்? அவனைக் காணவில்லை.

ஸஹாதே:—அவரேன் வருவார்? தற்சமயம் வந்தால்தான் எங்காவது மாட்டிக்கொள்ளவேண்டுமே யென்று ஒதுங்கிப் பதுங்கி நிற்பார்.

அர்ஜுனன்:—ஸஹாதேவா! அவனைத்தேடி சிரமப்பட்டுக் கண்டு பிடித்து மனத்தில் இறுத்திக்கொண்டவனை அவர் ஒரு நாளும் கைவிடாரடா? அப்படி அவரைக் கண்டுபிடிப்பதுதான் கஷ்டம். ஒருவர் கட்டுக்கும் அடங்காதவரன்றோ! அம் மாயாவி நம்மைத் தேடிவரட்டுமே என்று இருப்பார். அவரையும் தற்சமயம் நாம் கலக்கவேண்டும்.

தர்மர்:—ஸஹாதேவா! என்ன சொல்லினனும் துரியன்.

ஸஹாதே:—அண்ணா! நாளை சூரியாஸ்தமனத்திற்குள் கிருஷ்ணனை எவ்விதமாகிலும் பாண்டவர்களை மாநிலத்தில் வீழ்த்துகின்றேனென சபதம் செய்தனராம் துரியோதனனுக்கு அப் பீஷ்மர். அதை அவ் விறுமாப்புள்ள அரசன் பறையறிவிக்கச் செய்திருக்கிறான்.

பீமன்:—அவ்விதமா செய்தான். அடே! எங்களை மாய்க்க இப் பீஷ்மருலுந்தான் முடியுமா? அண்ணா! விடையளிப்பீர். இதோ நான் நேரில் சென்று அப் பெரியோரை மாய்த்து வருகின்றேன்.

அர்ஜுனன்:—எனக்கு கிருஷ்ண ஸஹாயமிருக்கும் வரையில் என்னைக் கொல்ல முன்வருபவன் இவ் வவனியில் எவனேனும் உளனோ?

தர்மர்:—அவசரப்படாதீர்கள். பிராதாக்களே! உங்கள் வலிமை போற்றத்தக்கதே. நமது தாதாவாகிய பீஷ்மரை நீங்கள் முற்

றும் அறியீர்கள். அவர் கிருஷ்ணபக்தர் அவர் வார்த்தை வீணாகாது அவர் முன் பின் யோசியாது ஒன்றும் கூற முன்வாரார். தீர்க்க யோசனையின் பேரிலேயே செய்திருப்பார். ஒருவன் அதிலும் பக்தன் சத்தியஸந்தன். ஒருவாக்குக்கொடுப்பின் அதைக் காப்பாற்ற முன் வரும் குணம் அப் பரந்தாமனுக்குண்டு. பக்தர்களைக் காக்கும் பரமதயாளுவன்றோ என்னப்பன், அக் கிருஷ்ணனும். ஆகையினாலே பீஷ்மர் வாக்குப் பொய்யாகாமலிருக்கக் காரியங்கள் செய்யக் கடமைபட்டவர். ஆகவே நாம் நாளது சூரியாஸ்தமனத்திற்குமுன் அழிவது திண்ணம். அர்ஜுனா நீ தான் சென்று அப் பரந்தாமனை அழைத்துவா.

பீமன்:—அண்ணா! சுத்த க்ஷத்திரியன் மனம் கலங்குவது நன்றன்று. விடும் உமது கவலையை. எங்காவது அதாமம் தர்மத்தை வெல்லுமா? பீமனைப் போரில் வெல்லும் சூரனும் உண்டோ?

அர்ஜுனன்:—எல்லாம் சரிதான். நான் யுத்தரங்கத்தில் பிராணனை விட துக்கிக்கவில்லை. எந்த க்ஷத்திரியன்தான் துக்கிப்பான்? கிருஷ்ண ஸஹாயம் பெற்ற நாம் அபஜெயமடைவோமெனின், இன்னும் என்ன லீலைகள் அக் கபட நாடகன் நடத்துகின்றான் பார்ப்போம்.

கிருஷ்ணன் தொங்கிய தலையுடன்
பிரவேசிக்க அவனை வரவேற்று

தர்மர்:—கிருஷ்ணா! என் மனவருத்தம்? உமக்கு என்ன யார் தீங்கிழைத்தனர். இந்நேரம் எங்கு சென்றிருந்தீர்? எங்களைப் பரதேசிகளாக விட்டுப் பிரிய மனம் கொள்ளலாமா? கிருஷ்ணா! ஆபத்பாந்தவா!

நமஸ்கரிக்கின்றார்.

கிருஷ்ணன்:—உங்களுக்கெல்லாம் என்ன? சுத்த க்ஷத்திரியர்கள் போர் செய்வதும் ஜெபிப்பதும், மாள்வதும், சகஜம். என் போன்ற, க்ஷத்திரியனாய்ப் பிறந்தும் யுத்தரங்கம் வந்தும் ஆயுதமெடுக்க சக்தியின்றி பேடிபோல் விளங்குகின்றேனே என்ற எண்ணமே என்னை வாட்டுகின்றதப்பா. நன்றாக என்னை எனது நேயர்கள் கட்டிப்போடுகின்றனர். என் நிலை பெரிதல்ல. அவர்களுக்கு உதவசக்தியின்றி சிற்சில சமயங்களிலேற்பட்டுவிடுகின்றதே என்ற ஏக்கமும் மேலிட ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் எங்காகிலுமிருக்கலாமென்றால் பாசம் விட்டபாடில்லை. என்னை உங்கள்பால் அதுவே இழுத்து வரச் செய்கின்றது. இதுவே என் மனதை வாட்டுகின்றதப்பா! தர்மா!

தர்மர்:—இப்பொழுது யாருக்கு என்ன வாக்குக் கொடுத்துவிட்டீர்? என்ன விபத்து நேர்ந்துவிட்டது? நாங்களன்றோ பெரும் ஆபத்தில் இருக்கின்றோம்.

கிரு:—அப்பீஷ்மனொருவன் அப்பக்கம்இருப்பதினாலேயே சங்கடம். அவனைத் தொலைத்துவிடின் பாண்டவர்களுக்கு அனுகூலமேற்படுமென்றெண்ணி இன்று சக்கிராயுதத்துடன் அவனைக் கொல்லப்போகும் தருணம் அர்ஜுனன் ஏதோ வாக்கை ஞாபகப்படுத்தி நிறுத்திவிட்டான். அதனால் வந்த ஆபத்துத்தான் தர்மா! இப்பொழுது.

தர்:—ஆம் கிருஷ்ணா! எங்களுக்கு ஆபத்துவரினும் வரலாம். நீர் வாக்குத்தந்ததை மறக்கலாமா? அதற்கு எதிரிடையாக நீரே செய்யப்புகின் உலகின் கண்ணுள்ள மானிடர்கள் என்ன சொல்வார்கள்.

கிரு:—வாஸ்தவம்தான், தர்மா! பக்தர்களைக் காப்பாற்றுவதும் அவர்கள் வார்த்தை பொய்யாகாமலிருக்கும்படி செய்வதும் என் பொருப்புதானே. எனக்கும் பக்தபராதீனன். என்ற பெயருண்டல்லவா?

அர்:—நன்றாகப் பீடிகை போட்டுக்கொள்கிறீர். அஸ்திவாரம் பலமே. கிருஷ்ணா! நீர்தான் பேசுகிறீரோ!

தர்:—உண்மையே. நீர் கட்டுப்பட்டவர்தான். அப்படி நடப்பது தானே.

கிரு:—அதுதானப்பா கஷ்டமாக முடிந்திருக்கிறது. வாய்விட்டுச் சொல்வதும் கஷ்டம். சொல்லாமலுமிருக்க முடியவில்லை என் செய்வேன். அர்ஜுனா!

அர்:—இந்த வேஷமெல்லாமெதற்கு. என்ன ஏற்பட்டுவிட்டது. சொல்லும். மார்க்கம் மீள யாதாகிலுமிருக்கிறதா என்று.

கிரு:—ஒரு பக்கத்திலோ தங்கை புருஷன் முதலானோர். அவர்களைக் காப்பாற்றுவதா அல்லது பக்தன் செய்த பிரதிக்ஞை வீணாய்ப்போகுமாறு பார்த்து வாளாயிருப்பதா. அர்ஜுனா! நீ தான் தப்பும்விதம் கூறவேண்டும்.

அர்:—உறவினரைவிட பக்தன்தான் மேலானவன். அவன் வார்த்தைக்கு பங்கம்வராமல் பார்த்துக்கொள்ளும் அதுவே தர்மம்.

கிரு:—உன்னிஷ்டம்.

பீமன்:—என்ன அர்ஜுனா! நீ சொல்வது விசித்ரமாக இருக்கிறது. நமக்கு அபஜெயமும் மரணமும் சம்பவிக்கட்டுமென நாமே கோரிக்கொள்வதா? வெகு அழகு. கிருஷ்ணா! உமது பக்தர் சத்யசந்தருமிருப்பின் சத்தியத்தை நிலைநிறுத்தும் பொருட்டு

பிரதிக்ஞை செய்திருப்பின் நீர் கட்டுப்படவேண்டியதே. அப்படியில்லையேல்.

அர்:—பீமா! கொஞ்சம் நிதானி. கிருஷ்ணர்தான் ஓர் ஏற்பாட்டிற்கு வரட்டுமே. நம் வாயிலிருந்து என்னவருகிறதெனப் பார்க்கிறார் அவருக்கா வழி தெரியாது. அவர் மாயாவியன்றோ அண்ணா!

தர்:—கிருஷ்ணா! இதென்ன கோலம். திரௌபதி சுபத்ரை முதலாயினோர் வைதவ்யம் அடைவது உமக்குச் சம்மதமா? துரியோதனாதிகள் ஜெயமடைவதில் உமக்குத் திருப்தியா? ஏன் ஒன்றும் பேசாது தலை குனிந்தவண்ணம் நிற்கின்றீர்?

கிரு:—வெகு சங்கடம், வெகு சங்கடம் என்ன செய்வதென்றெனக்குத் தோன்றவில்லை ஈசன் விட்டவழியாகின்றது.

ஸஹா:—இன்னும் வேறே ஈசன் ஒருவன் இருக்கின்றானா? போதும் போதும் நல்ல மாயம்.

பீமன்:—என்ன சொல்கிறீர் கிருஷ்ணா? நேரம் கடத்தாதீர். நீர் ஒன்றும் பேசாதிருப்பின் ஓர் ஸ்திரீயினிடம் மாட்டிக்கொண்டு பரிதவித்தவிதம் இன்னும் சிறுமையும் அடைவீர்.

கிரு:—பீமா! நான் ஒரு ஸ்திரியினிடமா மாட்டிக்கொண்டு சிறுமையடைந்தேன்! தெரியாமல் சொல்கிறாய். அநேகரிடமிருந்தடா நான் அல்லல்படுகின்றேன்.

பீமன்:—அண்ணா அன்று துரியோதனன் சபையில் திரௌபதையை துகிலுருங்காலை இக் கிருஷ்ணன் அவளுக்குக் கட்டுண்டு உதவவில்லையா? அந்த திரௌபதி எங்கு சென்றனள் தற்சமயம்? அவளை வரவழைப்போம். அவளது வேண்டுகோளுக்கு என்ன செய்யப்போகின்றார் பார்ப்போம்.

அர்:—பீமா நல்ல யோசனையே! அப் பெண்ணின் கூக்குரல் என்னவாகின்றதெனக் கவனிப்போம்.

கிரு:—நல்ல உபாயம் பீமார்ஜுனா! அவள் வரினும் நான் செய்யக் கூடியது என்ன?

பீமன்:—எதுவாயினுமாகுக. ஹா! கிருஷ்ணா! பக்தவத்ஸலனன்றோ நீ!

தர்:—ஒருக்கால் நமக்கு நேரிடப்போவதை உணர்ந்து திரௌபதி அக்னிப் பிரவேசமாகத் துணிந்தால்.

அர்:—ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா இருக்கிறார். தீமூட்டி அவளை அதில் தள்ளிவிட. அச்சங்கடம்கூட நாம் நேரில் பார்க்கவேண்டியதில்லை.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இதுவும் சொல்வாய் இன்னும் என்ன வேண்டினும் சொல்வாய். உனக்கு வேலை செய்ய ஒப்புக்கொண்டேனன்றோ.

அர்:—மன்னிப்பீர்.

அங்கம் 3—களம் 1.

திரௌபதியின் அந்தப்புரம்.

திரௌபதி—தனிமை.

திரௌபதி:—இன்று காலை முதல் எனக்கு என்னவோ சங்கடம் உண்டாகின்றது. இதுகாறும் ஒன்றும் தோன்றவில்லை. யுத்தம் ஆரம்பித்து ஒன்பது நாட்கள் ஆயின. பாண்டவர்கள்பால் சத்யத்திற்கு உழைப்பவர்கள்பால், ஜெயம் நிச்சயமென தோன்றினும் என் மனம் நிம்மதியில்லாமல் ஊசலாடுகின்றதே? நான் பதிவிரதையாயின் ஒரு காரணமுமின்றி என் மனம் சங்கடம் அடையாது. ஸ்திரீகளுக்கு புருஷனே தெய்வம். ஆகவே எனது நாதர்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமா? ஸ்ரீ கிருஷ்ண ஸஹாயம் பெற்றிருப்பினும் அவருக்கு அறியாமல் ஏதாவது தீங்கு சம்பவிக்கப்போகின்றதோ? க்ஷத்திரிய ஸ்திரீ தங்கள் புருஷர்களுக்கு யுத்தரங்கத்தில் யோசனை சொல்லப்போக யோக்யதையுள்ளவளே. ஆகவே நானே தற்சமயம் அவர்களிருப்பிடம் சென்று அவர்களுக்கு என்ன நேரிட்டது அல்லது என்ன நேரிடப்போகிறது, என அறிந்து அதற்கு உபாயம் கூறினல் நல்லது. என்ன ஏற்பட்டிருப்பினும் என்னப்பன் அந்தரங்க பக்தி எனக்கிருக்கும் வரை என்ன கவலை? எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குமன்றோ?

ஹே கிருஷ்ணு! ஆபத்பாந்தவா! நீயே சரணம்! உன்னையன்றி இப் பேதை மானிடர்களை நல்வழிப்படுத்துவோர் யாருளர்?

இனி நான் காலஹரணஞ் செய்யாமல் யுத்தரங்கம் செல்ல வேண்டும்.

புறப்படும்போது ஓர் வீரன் வர

அப்பா எங்கிருந்து வருகிறுய்? என்ன விசேஷம்? நாதர்கள் சௌக்யமா? கிருஷ்ணபரமாத்மா சௌக்கியமாயிருக்கிறுரு? இன்று சண்டையில் யார் பக்கம் ஜெயம்? துரோணுதி பெரியோர் சுகமா?

வீரன்:—அம்மையே! அனைவரும் சுகமே. உம்மை படைவீட்டில் அழைத்துவரச்சொன்னர். உமது வரவை எதிர்பார்த்திருக்கின்றனர்.

திரௌபதி:—என்னப்பா அவ்வளவு அவசரம்? கேவலம் ஸ்திரீ நான் என்ன செய்யக்கூடும்? கிருஷ்ணபரமாத்மாகூட இருக்

கின்ருரு? அவர் சஹாயம் செய்யும்பொழுது மற்றவர்கள் எதற்கு?

வீரன்:—தாமதம் வேண்டாம். சீக்கிரமே போவோம் புறப்படுங்கள்.

திரௌபதி:—வீணில் மனத்தைச் சஞ்சலப்படுத்திக் கொள்ள வேண்டாம். போய்த் தீரவிசாரித்து சமாசாரம் என்னவென்று அறிந்தபின்னரே அதற்கு உபாயம் தேடுவோம். எனக்கென்ன அதைப்பற்றிய கவலை. அவனொருவனன்ருே அப்பாரத்தை வஹிக்கிறவன்.

அங்கம் 3—களம் 2.

தர்மபுத்ரர் பாசறை.

பஞ்ச பாண்டவர்களும் கிருஷ்ணனும் இருக்க திரௌபதி பிரவேசித்து நமஸ்கரித்து மிக்க மரியாதையுடனேயே நிற்கிருள்.

கிருஷ்ணன்—திரௌபதி! உன் வரவை அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றனர். வீரபுருஷனின் மனைவி. துருபதமன்னனின் புதல்வி உங்கள் நாதருக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடத்திற்கு தக்கவழி சொல்வாய்.

திரௌ:—பரமாத்மா! எனது நாதருக்கு என்ன சங்கடம் எங்கிருந்து வரப்போகின்றது? பரமாத்மா அருகில் இருக்க அவர்களை யார் என்ன செய்யக்கூடும்? கேவலம் அபலையாகிய என் மானத்தைக் காப்பாற்றிய பரம்பொருள் என் மாங்கல்யத்தைக் காப்பாற்ருமலா இருப்பார். கிருஷ்ணு! பரம்பொருளே! இது என்ன சோதனை. என்ன சங்கடம் ஏற்படப்போகின்றது எனது கணவர்களுக்கு?

கிரு:—ஒன்றும் தெரியாதவளாயிருக்கின்ருயே பாவம் ஸ்திரீ தானே. அந்தப்புரத்திலிருப்பவள்; உனக்கெப்படி எட்டும் பீஷ்மர் செய்த பிரதிக்னை.

திரௌ:—பீஷ்மர் பிரதிக்னையா? என்ன செய்திருக்கிருர். அம் மஹான் வாயினின்று வருவது வீணுகாதே. எங்களுக்கென்ன, நீர் இருக்கின்றீர். உம்மைத் தஞ்சமென்றடைந்தபின் எங்களுக்குக் கவலை எதற்கு?

கிரு:—அம்மா! அப்பெரியாரும் என்னை நம்பினவர் அவரை நான் கைவிடுதல் அழகா?

திரௌ:—அப்படியாயின் உமதிஷ்டம் என்ன, அப் பெரியோரின் அபிப்பிராயம் என்ன அதையும் தெரிவியும்.

கிரு:—நாளை சூரியாஸ்தமனத்திற்குள் இப்பாரதப்போரை முடிக்கும் மார்க்கம் சொல்லியிருக்கிறார்.

திரௌ:—மிகவும் நலம். இதற்கு நீர் அவருக்கு அவஸ்யம் உதவி புரியவேண்டியது. அம் மஹான் வாக்கு என்ன தவறிவந்துவிட்டது? இதனால் பாண்டவர்களுக்கு எவ்வாறு சங்கடம்?

கிரு:—பாரதப்போர் முடியவேண்டின்.

துரௌ:—கௌரவர்கள் மாளவேண்டும். இதிலென்ன சந்தேகம். பரம்பொருளே! நான் வந்ததுமுதல் பாண்டவர்கள் மிக்க துக்காக்கிராந்தர்களாயிருக்கக் காரணமென்ன? சுத்த க்ஷத்திரியர்களாகிய எனது நாதர்கள் விசாரப்பட என் மனம் திகிலடைகின்றது. அவர்கள் கவலைக்கு காரணமென்னவென்று விரைவில் கூறும்.

கிரு:—பீஷ்மர் சபதமே உனது நாதர்களின் துக்கத்துக்குக் காரணம்.

துரௌ:—என்ன? துரியோதனாதியர் அழிவதற்காக வருந்துகின்றனரு? அதர்மம் நசித்துப் போய்விடுமே என்பதற்கு துக்கமோ? எங்கு தங்களுக்கு ராஜ்யம் வந்துவிடுமே என்ற பொருப்பினால் கவலையா? எது அவர்கள் மனதைக் கலக்குகின்றது?

கிரு:—திரௌபதி நாளைய சாயங்காலத்திற்குள் பாண்டவர்களை ஹதம் செய்வதாக என்மேல் ஆணையிட்டு இருக்கிறார் பீஷ்மர்.

துரௌ:—அவர் அதுவரையில் உயிருடனிருந்தால்தானே. அவர் வாக்கு நிறைவேறப்போகின்றது. அர்ஜுனன் காண்டீபம் சாமான்யமானதா? அவர் சாரதியின் திறமையை யார் கண்டிருக்கின்றனர்? அதற்காக வருந்தலாமா? அப்படித்தான் சம்பவித்தாலும் க்ஷத்திரியர்கள் போர்க்களத்தில் மார்பில் காயத்துடன் இறப்பின் வீரசுவர்க்கம் புகுவார்களன்றோ? கிருஷ்ணா. கவலையை ஒழியும். நீர் உமது கடமையைச் செய்வீர்.

கிரு:—உன்னிஷ்டப்படியே செய்கின்றேன். என் கடமையைச் செய்வதெனில் நான் எனது பக்தன் வார்த்தைக்கு பங்கமேற்படாமல் கார்த்துக்கொள்ளவேண்டியதே.

துரௌ:—அப்படியே செய்யும். அதை நான் தடுக்க முன்வரவில்லை. அப்படிச் செய்யுமுன் எனக்குமோர் உபகாரம் செய்யும்.

கிரு:—உனக்கென்ன வேண்டியது இச்சந்தர்ப்பத்தில்?

துரௌ:—கிருஷ்ணா! உனக்குத் தெரியாதது அன்று. எனது நாதர்களுக்கு நற்கதி கிடைக்கும் போர்க்களத்தில் பீஷ்மர் கையால் அடிபட்டு மறிப்பதால். என்கதி என்னவாவது. அவர்கள் வீரசுவர்க்கம் புகுமுன் நான் அக்னிப் பிரவேசம் செய்வதாய் நிச்ச

யித்துளேன். என் உயிரை உம்மிடம் முன்பே ஒப்பித்து விட்டேன் ஆகையால் உமக்கு முன்பே அக்னிப் பிரவேசம் செய்கின்றேன். அதற்கு வேண்டிய உதவி தாமே புரிய வேண்டும்.

கிரு:—அதுவும் செய்கின்றேன் உன் பொருட்டு. ஆனுல் இங்கு உன் பர்த்தாக்கள் முன்னிலையில் ஒன்றும் செய்யேன். நான் கூப்பிடும் இடத்திற்குவந்தால் சகலவித ஏற்பாடும் செய்கின்றேன். உன் மனோதரம் ஈடேறும்.

துரௌ:—அப்படியா! என் மனோரதம் ஈடேறுமா? கிருஷ்ணு ஜாக்கிரதை. நான் புருஷர்களை தெய்வமென பாவிக்கும் பெண் என்பதை மறவாதேயும். எனக்கு வேறு தெய்வம் கிடையாது. ஆகவே வாய்பேசாது உம்மைப் பின்பற்றுகின்றேன். வாரும் வழி காட்டும்.

கிரு:—உனது நாதர்களிடம் விடை பெற்றுக்கொண்டனையா?

துரௌ:—அன்று ராஜசபையில் துகிலுறியுங்காலே இவர்களிடம் அனுமதிபெற்று உம்மைக் கூப்பிட்டேன்? நீர் எனக்கு உதவுவீர் என்ற பூர்ண நம்பிக்கையுள்ளவள் நான். வீண் நேரம் கடத்தாது வாரும். காரியம் கைகூடும் மார்க்கம் செய்யும். இது ஒன்றே உம்மை நான் வேண்டிக்கொள்வது.

கிரு:—பாண்டவர்களே! போய்வருகின்றேன்.

பீமன்:—வீணில் அவமானம் அடையாதீர்.

தர்:—எங்களை அகதியாய் விடுவது அழகா?

அர்:—கிருஷ்ணு! ஒரு வார்த்தை. முன்பே பீஷ்மர் தன் மரணத்தைப்பற்றி எங்களுக்குச் சொல்வதாகக் கூறியிருக்கிறுர். அதைப் போய்க் கேட்டாலென்ன?

கிரு:—சீக்கிரமே திரும்பி வருகின்றேன்.

கிருஷ்ணனும் திரௌபதியும் போகின்றனர்.

அங்கம் 4—களம் 1.

காட்டுமார்க்கம்.

கிருஷ்ணன் முன்செல்ல திரௌபதி பின்செல்கிருள்.

கிருஷ்ணன்:—மாயையினுல் இக்கரடுமுரடான பாதையை ஏற்படுத்தினேன். இவள் செய்யப்புகும் காரியத்திற்கு பர்த்தாக்களின் அனுமதியில்லாததால் ஓர் மனைவியாகூலத்தை உண்டு பண்ணியபின் அவள் மனோபாவத்தை அறிவோம்.

அம்மா! என்று திரௌபதி அலர்வதைக்கேட்டு திரும்பி,

திரௌபதி என்ன நேரிட்டது? ஏன் பிரலாபிக்கின்றாய். யாரால் உனக்கு தீங்கு நேர்ந்தது?

திரௌபதி:—ஐயோ இப்படி காட்டுமார்க்கமாக நடந்துவந்ததில் காலில் முள்தைத்து வலி எடுக்கிறதே? பொறுக்கமுடியவில்லையே என் செய்வேன் கிருஷ்ணு!

கிரு:—யாருக்கு முள் தைத்துவிட்டது?

திரௌ:—எனக்குத்தானே தைத்தது. உயிரைவிடப்போகும் எனக்கு இந்தத்தடை ஒன்று ஏற்படவேண்டுமா?

கிரு:—ஒருக்கால் இச்சம்பவம் நீ உயிர் துறப்பது சம்மதமில்லை என்பதைக் காட்டுகின்றதோ என்னவோ.

திரௌ:—ஆரம்பித்தீரா உமது பழங்கதையை. கிருஷ்ணு எனது நாதர்கள் சென்றபின் நான் வைதவ்யத்துடன் வாழவேண்டுமோ? அப்படிப் பார்ப்பதில் உமக்குத் திருப்தியோ? எனது உயிர் என்வசமிருப்பது. துறக்கவோ அல்லது உயிருடனிருக்கவோ எனது இஷ்டம். நான் உயிருடனிருக்கவேண்டுமாயின் நாதர்களுடன் இருந்து அவர்களுக்கு சிஸ்ருஷை செய்யவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு முன்பே உயிரைத் தியாகம் செய்து அவர்கள் வரவை மேலுலகத்திலிருந்து காத்துக்கொண்டிருக்கவேண்டும். இதுவன்றோ ஸ்திரீகளின் தர்மம்.

கிரு:—வாஸ்தவம்தான். இச்சிறுமுள் குத்தினதனுல் இவ்வளவு அவஸ்தை உண்டாயதே. கதறுகிறாயே. உன் ஆவியைப் போக்குமுன் அதுவும் நீயாக விடப்போகுமுன் என்னபாடு படுவாய் யோசித்தனையா?

திரௌ:—ஆனுல் அவ்வவஸ்தை மிகவும் தாங்கத்தகாததோ? என் ஆவியை நான் விட்டுவிடத்தயார். இதிலென்ன சிரமம்.

கிரு:—உனது ஆவிதான் சந்தேகமில்லை விட்டுவிடலாம். நீயே உன்னை ஜெயித்து எஜமானியாயிருப்பின்.

திரௌ:—என்ன சொல்கிறீர்? நான் எனக்கு எஜமானியல்லவா?

கிரு:—சற்று யோஜித்துச் சொல். நீ ஓர் ஸ்திரீதானே. ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரம் உண்டா?

திரௌ:—ஹா மறந்தேன் கண்ணு! இம்மாயத்தின் மர்மத்தையும் அறிந்தேன். என்னை மன்னிப்பீர். நான் பிராணத்தியாகம் செய்யும் விஷயமாக எனது பர்த்தாக்களிடம் அனுமதிவாங்காது வந்ததே அபசாரம். அதான் எனக்கு மனவேதனை உண்டானது போலும். என் செய்வேன் இனி?

கிரு:—நாதர்களிருப்பிடம் திரும்புவது.

திரௌ:—திரும்பின் சிறியார்களா? கிருஷ்ணு! நான் என் செய்வது? உம்மையே நம்பி உம் பின்னுல் வந்துவிட்டேன். நீர்தான்

ஏதாவது மார்க்கம் செய்யவேண்டும். நானிருப்பதும் இறப்பதும் உம்மையன்றோ சார்ந்தது. கிருஷ்ணனுடன் அக்னிப் பிரவேசம் செய்யச் சென்றாள். திரும்பினாள் எனின் காரியம் ஜெயத்துடன் திரௌபதி திரும்பியிருக்கிறாளென பாண்டவர்கள் சந்தோஷப்படமாட்டார்களா கிருஷ்ணா? ஆகவே உமது மனப்படி நடத்தும். எதற்கும் நான் தயார்.

கிரு:—திரௌபதி பக்தர்களிடம் அகப்பட்டவனின்பாடு திண்டாட்டம்தான். நீ என்ன செய்வாய்? நான் சொல்லும் வண்ணம் நடப்பதில் ஆக்ஷேபணை பில்லையே?

திரௌ—அதென்ன அப்படிக் கேட்கிறீர்? நீர் என்ன செய்ய சொல்லினும் செய்கிறேன்.

கிரு:—அப்படியாயின் நான சொல்வதற்கு வாய் பேசாது, காரணம் கேளாது, ஒன்றும் சிந்தியாது நடக்கவேண்டும். அப்படியெனின் பக்த சம்ரக்ஷணார்த்தம் கடைசி மார்க்கத்தையும் கையாண்டு பார்த்துவிடுகிறேன்.

திரௌ:—அப்படியே. ஸ்வாமி.

கிரு:—கிருஷ்ணே! இந்தா (பாதரக்ஷகளைக் கொடுத்து). இவைகளை காலில் தரித்துக்கொண்டு இக்காடு முரடான வழியாக நடந்து வா.

திரௌ:—பாதரக்ஷையின் பேரிலா நடக்கவேண்டும்?

கிரு—ஆரம்பித்தனையா உனக்காக ஒன்றும் அதிகாரமில்லையல்லவா? பக்தியென்னும் தோணியின்மீது ஏறினால்தானே அவனை அடையமுயலலாம். நடந்துவா என்பின்னால் இந்த உலக மாயையாகிய வருத்தம் விசாரம் ஒன்றும் உன்னைப் பீடிக்காது.

திரௌ:—அப்படியா அறிந்தேன். எங்கு செல்லவேண்டும்?

கிரு:—சொல்கிறேன் கேள். அருகில் பெரியோர் ஒருவர் இருக்கிறார். சத்யவிருதர் என்ற பெயருள்ளவர். மஹாசத்யசீலர். எனது உத்தமபக்தர். அவரை நீ தரிசிக்கவேண்டும் முதலில்.

திரௌ:—அதற்காகத்தான் முதலில் ரக்ஷை தந்ததோ? அவரை தரிசித்தபின்?

கிரு:—அவசரப்படாதே! அவர் பெரியோர் என்றேன். அவரை நமஸ்கரிக்கும் தருணம் சுமங்கலீபவ என்று ஆசீர்வதிப்பார். நீ நமஸ்கரித்துக்கொண்டே இரு. அவர் எதற்காக நமஸ்கரிக்கின்றாய் என்று கேட்டால் உமது தெய்வத்தின்மீது ஆணையிட்டு உனது மாங்கல்யம் வளரக்கடவது என்று ஆசீர்வதிக்கச் சொல்லு. அவர் வாக்கினின்று அவ்வார்த்தைகள்வரின் உங்களுக்கு நல்ல காலமே. இதுதான் திரௌபதி எனது கடைசி யுக்தி. வெற்றிபெறின் நலமே. இல்லையேல்?

திரௌ:—பாதரக்ஷை தந்தீர். பெரியோர் தர்சனமும் ஏற்பாடு செய்திருக்கிறீர். சும்மாவா போய்விடும் உமது முயற்சி? அதிலும் நீர் துணையாக வருகிறீர். வேறென்ன வேண்டும் எனக்கு? நடவும். வழிகாட்டும்.

கிரு:—அம்மையே அப் பெரியாரின் ஆசிரமம் அருகில் வந்துவிட்டது இனி உம்மைப் பின்பற்ற அருகனல்ல விடையளிப்பீர்.

திரௌ:—என்ன சொல்லுகிறீர்? விடையளிப்பதா! நீர் என்னை விட்டுப்பிரிவது. நான் தனிமையில் செல்வதோ?

கிரு:—இது சொல்லவும் வேண்டுமா மானிடர்களாய் பிறந்தவர்களுக்கு?

திரௌ:—(நமஸ்கரித்து) என்னைத் தனிமையில் விடாதீர். நான் அபலை.

கிரு:—இதென்னடா சங்கடம் சரி நான் கிருஷ்ணனாக உன்னுடன் வரமாட்டேன்; இனி ஜவானாக உனக்குத் துணை வருவதுபோல வருவேன். இதற்கு சம்மதமா?

திரௌ:—அப் பெரியாரின் முன்பும் நீர்தான் கொண்டுசேர்க்க வேண்டும்.

கிரு:—உள்ளே விட்டால் வருகிறேன். இல்லையேல் நானென் செய்வது.

திரௌ:—உம்மை உள்ளே விடமாட்டார்களா? சரி சீக்கிரமே நடவும்.

கிரு:—ஆரம்பித்துவிட்டாள் யஜமானத்வம். அப்படியே.

> கிருஷ்ணன் ஸேவகனாக மாறி டபாலியுடன் முன் செல்லபின்னால் திரௌபதி பாதரக்ஷைமேல் நடந்து வருகிறாள்.

அங்கம் 4—களம்2.

சத்திய விரதர் இருப்பிடம்.

வாசலில் துரியோதனனும் கர்ணனும் இரு காவலாளிகளாக விளங்குகின்றனர்.

துரியோதனன்:—கர்ணா! இன்று வெகு ஜாக்கிரதையாகவே நாம் பாரா செய்யவேண்டும். இல்லையேல் எவ்விதமும் விரோதிகளில் அதி வீரனான பற்குனன் கிருஷ்ணஸஹாயம் பெற்றிருப்பதால் இவரிருப்பிடம் அடைந்து ஏதாவது யுக்தி அறிந்து கொண்டு போய்விடுவான்.

கர்ணன்:—வாஸ்தவம்தான் அக் கண்ணனும் மாயாவியல்லவா?

யாரோ இருவர் வருகின்றதைப் பார்த்து யாரோ ஓர் ஸ்திரீ இம்மஹானை பார்வையிட வருவதாகத் தோன்றுகிறது யாராக இருக்கலாம்.

துரி:—ஸ்திரீதானே. பார்வையிட்டுச் செல்லட்டும். ஒரு புருஷனை யும் நாம் கண்டிப்பாய் உள்ளேவிடலாகாது.

கர்:—அப்படியே செய்வோம்,

கிட்டவரவும் திரௌபதியெனக் கண்டுகொள்ளாமல்

பாரம்மணி தாங்கள்? இங்கெங்கு வந்தது?

திரௌ:—இங்கு இருக்கும் பெரியோரைத் தரிசித்து ஆசிபெற்றுச் செல்லவே வந்தது. நான் பெரும் கஷ்டத்திற்காளாயிருப்ப வள். ஆகையால் தயைபுரியவேண்டும்.

துரி:—பார்க்கவும் பரிதாபமாக இருக்கிறது. ஸ்திரீதானே போய் வா. அதிகநேரம் அப்பெரியோரை சிரமப்படுத்தாதே.

திரௌ:—எனக்கென்ன அவரிடம் வேலை? சீக்கிரமே வந்துவிடு கின்றேன். எங்கே ஜவான்? அவன் பின் தங்கிவிட்டானு என்ன.

கிரு:—இல்லையம்மணி இதோ நிற்கின்றேன்.

கர்:—யாரது ஜவானு? வெளியே நில் உனக்கென்ன வேலை.

கிரு:—எனது எஜமானியம்மாள் கூடவரச்சொன்னுள் அதான்.

துரி:—ஓர் ஆடவனும் உட்செல்லலாகாது. போனுல் போகிறது ஸ்திரீதானே போய்விட்டுவரட்டுமென்று விட்டதற்கா?

கிரு:—கோபித்துக்கொள்ளாதீர்கள், வேண்டாமெனில் நான் உள்ளே பிரவேசிக்கவில்லை. அம்மணி பெரியாரைப்பார்க்கப் போவதால் பாதரக்ஷையை இப்படி கழற்றிவிட்டுப்போம் நான் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்கிறேன்.

திரௌ:—அப்படியே.

கழற்றிவிட்டுச் செல்லவும் ஸ்ரீ கிருஷ்ணன் அந்த பாதரக்ஷையை எடுத்துத் தனது பீதாம்பரத்தில் சுருட்டித் தலைமீது தாங்கி நிற்பதைக் கண்ட

கர்:—துரியோதனு! கண்டனையா கூற்றை ஓர் ஸ்திரீயின் பாத ரக்ஷையைத் தலைமேல் சுமந்து நிற்கும் ஜவானை?

துரி:—இது ஏதோ பித்துப்பிடித்த ஜவானுய் இருக்கவேண்டும்.

கர்:—அப்படியல்ல துரியோதனு இதில் ஏதோ விசேஷமிருக்க வேண்டும் ஒருக்கால் அம்மாயாவியின் கூற்றிலொன்ருே இது?

துரி—மாயாவியாவது! கூற்ருவது! எல்லாம் மனப்பிராந்திதான் நாளை சூரியாஸ்தமனத்திற்குள் நமது பகைவர்கள் ஒழியப் போகின்றனர். இனி நமக்கென்ன கவலை? அப்பா ஜவான்

இது யார் உள்ளே சென்றது? நீ எவ்வளவு நாட்களாக அவளிடம் வேலை பார்த்துவருகிருய்?

கிரு:—உள்ளே சென்ற அம்மாளின் பக்திக்கு ஈடுபட்டவன் நான். அவள் ஓர் பதிவிரதா சிரோன்மணி. தன் நாயகன்மார்களை மீட்கவும் சத்ருக்களை ஒழிக்கவும் மார்க்கம் தேட உத்தமரைத் தெரிசிக்கவேண்டி வந்திருக்கிருள். நீங்கள் பேருபகாரியாதலால் தடை செய்யாது அவளுக்கு உதவி புரிந்தீர்கள். அவ்வம்மையின் பாதரக்ஷைகள் இவைகள். அவைகளைத் தாங்கி நிற்கும் பாக்கியம் இப்பொழுதாவது கிட்டிற்றே என எண்ணி சுமந்து நிற்கின்றேன். அப்படிப்பட்ட உத்தமி அந்த அம்மை.

கர்:—அப்படியா! எங்களுக்கு அவ்வம்மையின் தரிசனம் செய்து வைத்தீரே இப்புண்ணியம் யாருக்குக்கிட்டும்? அவ்வம்மை யாரின் நாதர்கள் எக்கஷ்டத்திலிருக்கின்றனரோ? நீர் முன்பே எங்களிடம் சொல்லியிருப்பின் நாங்கள் வந்து உதவிபுரிந்திருப்போமே.

கிரு:—(தனிமை) இதற்குள் திரௌபதி பீஷ்மரைக்கண்டு ஆசி பெற்றிருப்பாள். இவர்களுக்குத் தெரிந்தால்தானென்ன? (வெளிப்படையாய்) அப்பா அவ்வம்மையே திரௌபதி, பஞ்ச பாண்டவர்களின் மனைவி.

துரி:—கர்ணு! வந்தது பெரும் மோசம்.

கர்:—முன்பே சொன்னேனே இஜ்ஜவானும் வந்திருப்பவளும் சமானியன் என எண்ணுதே என்று. அம்மாயக்கண்ணனே இவ்வுருக்கொண்டு வந்திருப்பான்.

துரி:—இனி என்செய்யலாம்?

கர்:—நாமென்ன செய்வது? எல்லாம் விதியின்படி நடக்கின்றது. ஆயினும் சுத்த க்ஷத்திரியர்களாகிய நாம் கடைசிவரை யுத்தம் செய்தே திரும்புவோம் இல்லையேல் வீரசுவர்க்கம் புகுவோம்.

துரி:—அதிலும் சந்தேகமா!

அங்கம் 4—களம் 3.

சத்யவிருதர் உள்வீடு

சத்யவிருதர் உட்கார்ந்திருக்க திரௌபதி பிரவேசித்து நமஸ்கரிக்கின்ருள்.

சத்யவிருதர்:—தீர்க்க சுமங்கலீபவ.

திரௌபதி மறுபடியும் நமஸ்கரிக்க,

தீர்க்க சுமங்கலீபவ.

சத்யவிருதரும் வாழ்த்திக்கொண்டேயிருக்க திரௌபதி விடாது நமஸ்கரிப்பதைக்கண்டு

பெண்ணே! நீயார்? நீ திரும்பத் திரும்ப நமஸ்கரிக்கக் காரணம் யாது? சீக்கிரம் உரைப்பாய்.

திரௌ:—பூஜ்யரே! பெரியோரே! நீர் எந்த தெய்வத்தை அல்லும் பகலும் பூஜிக்கின்றீரோ எவர்மீது உமக்கு அந்தரங்க பக்திமிருந்திருக்கிறதோ அவர்மீது சத்யம் வைத்து என்னை எப்பொழுது வாழ்த்துவீரோ அப்பொழுதுதான் என்மனம் நிம்மதியடையும்.

சத்:—பெண்ணே! எந்த ஸ்ரீ கிருஷ்ணனை அல்லும் பகலும் தியானித்துக் கொண்டிருக்கின்றேனே எந்த கிருஷ்ணனின் கண்ணால் உலகத்தை கிருஷ்ணமயமாகக் காண்கின்றேனே எந்த கிருஷ்ண பரமாத்மாவின் உத்திரவை எதிர்பார்த்து இவ்வுடலை தரித்திருக்கின்றனே அந்த எம்பெருமான் பக்தவத்ஸலன் ஸ்ரீகிருஷ்ணன்மீது ஆணைப்படி உன் மாங்கல்யம் வளரக்கடவது. போதுமா? இப்பொழுது ஆகிலும் உள்ளதை உள்ளபடி உரைப்பாய். நீ யார்? பார்த்தால் பதிவிரதா சிரோன்மணியாய் காணப்படுகிறாய் இந்த அவநேரத்திலே தனிமையாக இங்கு வந்தது என்? கூடயாராவது துணைக்கு வந்திருக்கின்றாரு? சீக்கிரமே சொல்வாய் பெண்ணே.

திரௌ:—ஆரியரே! நானே பாஞ்சாலி. அப்பாண்டவர்களின் மனைவி. நாளைய சூரியாஸ்தமனத்திற்குள் நீர் பாண்டவர்களை வீழ்த்துவதாக சபதம் செய்ய என்விதி என்னவாவது என்று பிரலாபித்து நிற்கும் தருணம் பெரியோரிடம்வரின் எனது குறை நீங்கும் என்று எண்ணி இவ்விடம வந்தேன். குறை நீங்கிற்று. சென்றுவருகிறேன். விடையளிப்பீர் பிதாமஹரே.

சத்:—உன்னுடன் யாரேனும் வந்திருக்கின்றனரு? நீயாக வந்திருக்கமாட்டாய். அம்மாயாவியின் வேலையே இது. அவன் எங்கு இருக்கின்றான் கூறுவாய்.

திரௌ:—என்னுடன் எங்கள் ஜவான் ஒருவன் வந்திருக்கிறான். வாயிலிலுள்ள காவலாளிகளால் நிறுத்தப்பட்டு வாயிலிலேயே இருப்பான் என நினைக்கின்றேன். எனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன பிரதி செய்யப்போகின்றேன். பெரியோரே விடையளிப்பீர் போய்வருகின்றேன்.

சத்:—அப்படியா அம்மாயாவி ஜவானாக வந்துளனு? அவன் வாசலில் நிறுத்தப்பட்டானு? அவனைக் காக்கவைப்பவரும் இவ்வுலகில் இருக்கின்றனரு? அவன் என் கண்முன் விழாமல் மறைந்து விடுவானே? நீபோய் அவனை சீக்கிரமே பார்வை

யிட்டு உபசரிக்கவேண்டும் நான். நேரம் கடத்தாமல் நான் முன் செல்கின்றேன்.

அதிவிரைவாக வெளியில் வந்து

ஹே கிருஷ்ணு! பரந்தாமா! இதென்னடா கோலம்? உன்னை இப்படியே ஜவானுகவே என்னுளுமிருக்கும்படி சபித்துவிடு வேன். அந்த சக்தி எனக்குண்டு. ஆயினும் கோபம் பாபம் என்பதை மேலிட்டும் பாரதப்போர் முடியும் வரையிலாவது நீ கிருஷ்ணனுக உலாவிவரவேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டும் உன்னை சபியாது விடுகின்றேன். நீ பாண்டவ ஸஹாயன் என்பதை முற்றும் அறிந்தும் உன்மீது சத்யம் செய்தேன். அதை அறிந்து இவ்விதமாயம் செய்தாயோ? ஹே கிருஷ்ணு! என்ன வாய் திறவாமல் நிற்கின்றாய்? தலையில் என்ன சுமக்கிறாய்? உனக்குச் சுமக்க வேண்டியபாரம் புதிதாக என்ன வந்திருக்கிறது? கூடுமானல் நானும் உன்னுடன் பகிர்ந்து கொள்ளுகின்றேனே. வாயைத் திறந்து என்னுடன் பேசலாகாதா? கிருஷ்ணு ஒன்றிற்கும் யோசியாதே.

கிரு:—தாங்கக்கூடாத பாரம் பீஷ்மா நான் தாங்கவேண்டி இருக்கின்றது. எனது பக்தன் வாக்கு வீணுகுமே என்ற கவலையான பாரமப்பா இப்பளு. இதை உன்னிடம் சமர்ப்பித்து விட்டேன். நீ எவ்வாறு பகிர்ந்துகொள்ளப்போகிறாய்? உனது வாக்கு வீணுகில்உலகம் நகைக்குமடா! என் செய்வேன்? பீஷ்மா!

பீஷ்:—அதற்கு நீர் கவலைப்படவேண்டாம். சட்டியிருந்தாலல்லவோ பண்டமிருக்க? சட்டியே உடைந்து போய்விடின் பண்டத்தைப்பற்றிய கவலை அதற்கெதற்கு? நாளை சாயந்திரமிருந்தாலல்லவோ நான் பாண்டவர்களை வீழ்த்த? அதற்குமுன்தான் என் ஆவி உபிரினின்றும் நீங்கப்போகின்றதே. இதை நீ அறியாயோ கிருஷ்ணு! என் மரணேபாயத்தைப் பாண்டவர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு நடத்திய நாடகமோ இது? நீர் ஒன்றுக்கும் கவலைகொள்ளவேண்டாம். தாம் தாங்கிநிற்கும் வஸ்து என்னவோ?

பீதாம்பரத்தை எடுத்து விரிக்க பாதரக்ஷை இருப்பதைக்கண்டு கண்ணில் ஒத்திக்கொண்டு

கண்ணு! இது எப்பாக்யவந்தனின் பாதரக்ஷை? தாம் சுமக்கக்காரணம் யாது? உலகத்தை மூன்றடிகளாலே அளந்த திருமால் மற்றெருவர் பாதரக்ஷையை சுமப்பதென்றால் மிகவும் சிலாக்யமாகவே இருக்கவேண்டும். உலகனைத்தும் உமது பாதாரவிந்தம் கிடைக்கவேண்டுமே என அல்லல்பட கிருஷ்ணு! நீர்

ஒருவர் பாதரக்ஷையை சுமப்பதென்றால் எளிதா! ஹே ஜகந்நாதா! உள்ளதை உள்ளபடி சொல்லப் பிரார்த்திக்கின்றேன். இது எந்த பக்தனுடையது?

அப் பாதரக்ஷகளை கண்ணில் ஒத்திக்கொண்டு மார்போடு அணைக்கும் தருணம் திரௌபதி மூர்ச்சையாகின்றாள்

கண்ணா! இதென்ன திடீரென திரௌபதி மூர்ச்சையாகினாள். ஒன்றும் விளங்கவில்லையே. சீக்கிரம் சொல்லலாகாதா.

கிரு:—பீஷ்மா! இப்பாதரக்ஷ அப் புண்யவதியினுடையதே. அவள் பக்திக்கு கட்டுப்பட்டவனடா நான். அவள் மஹா பக்தசிரோன்மணி. பதிவிரதாசிரோன்மணியப்பா. நளாயனியின் அவதாரம். அவள் பெய்யென்றால் பெய்யுமழை. அவள் பக்திக்குக் கட்டுப்பட்டு அன்று துரியோதனாதிகள் சபையில் துகிலுறியப்பட்டகாலை என்னை அழைக்க நான் ருக்மணியுடன் சொக்கட்டானடிக்கொண்டிருக்கும் தருவாயில் அக்ஷயமென்று சொல்ல மானத்தைக் காப்பாற்றிக்கொண்டாள். அவள் என்னைக் கூப்பிடுவதற்கு வேளை போது ஒன்றுமேயில்லை. அவளுக்கு நான் கட்டுப்பட்டவன். உன்னையும் நான் காப்பாற்ற விருதம் பூண்டவன். ஆயினும் அன்று துரியோதனன் சபையில் திரௌபதி துகிலுரிக்கப்பட்டகாலை எனக்கு தர்மம் கூற பெரியோர்களில்லையா என்று அவள் வாய்விட்டலற நீயும் வாளாயிருந்தாயன்றோ? அப்படி அவளை கஷ்டப்படுத்தியதின் பொருட்டு நீயும் நாளையே இறந்து உத்திராயணம் வரும்வரை சரப்படுக்கையில் படுத்து அவஸ்தை அனுபவிக்கப்போகிறாய் அவ்வவஸ்தையும் இவள் பொருட்டுத்தான் உனக்கு ஏற்பட்டது. அதை உனக்கு ஞாபகமூட்டவே இப்பொழுது அவளை உன்முன் கொண்டுவந்து நான் சுமந்துவந்த மூட்டையையும் கீழே போட்டு என் பாரத்தையும் தீர்த்துக்கொண்டது. பீஷ்மா கவலையை ஒழி. உன் வரவை மேலோர் எதிர்பார்த்திருக்கின்றனர்.

பீஷ்மர்:—எல்லாம் தமது திருவுளம்

திரௌபதி கண்விழித்து

திரௌ:—இங்கு காவல்புரிந்தவர்களெங்கே போயினர்? என்கூட வந்த ஜவான் எங்கே.

ஜவான் கிருஷ்ண ரூபமாக மாரியதைக்கண்டு

கிருஷ்ணா! எல்லாம் சுபமாகவே முடிந்தது இனிக் கவலை வேண்டாம். பாண்டவர்களைத் தருவிப்பதுதானே.

பாண்டவர்கள் வந்து கிருஷ்ணனுக்கும் பீஷ்மருக்கும் அடிவணங்கிய பின்

அர்:—பிதாமஹரே! முன்பே நீர் உமது மரணோபாயத்தைக் கூறுவதாக வாக்களித்தீர். தற்சமயம் சொல்லப் பிரார்த்திக்கின்றேன்.

பீஷ்மர்:—அப்பா அர்ஜுனா! கவலைப்படாதே எனது மரண காலம் கிட்டிவிட்டது. நாளையதினம் நான் மரண காயப்பட்டு வீழ்ந்துவிடுவேன். சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு நீ என் மேல் பாணம்வர்ஷிப்பாயாயின் நான் சும்மாயிருப்பேன். சிகண்டி ஓர் நபும்ஸகன். அவனுடன் நான் சண்டையிடமாட்டேன். ஆகவே அதுவே உபாயமப்பா. நீங்கள் ஒன்றிற்கும் கவலைப் படவேண்டாம். தர்மாத்மாக்களுக்கு சீக்கிரமே நல்ல காலம் ஏர்படும். சுகமே போய்வாருங்கள். அவரவர்கள் கர்மத்தை அவரவர்கள் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்.

பீமன்:—கிருஷ்ணா! பேஷ்! திரௌபதியின் பாதரக்ஷைகளைத் தூக்கினையா? வேண்டும். நான் முன்பு சொன்னபடியே ஆயிற்று.

கிரு:—பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறு என்றால் ஏறித்தானே ஆகவேண்டும். அர்ஜுனா கண்டனையா திரௌபதியின் சக்தியை.

அர்ஜுனன்:—எல்லாம் உமது அனுக்கிரகம்

கிருஷ்ணன்:—இனியாவது உனது கடமையை நீ செய்யலாமன்றோ.

அர்ஜுனன்:—செய்யவேண்டியதுதான்.

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

PATRONS.

Mr. M. V. Abdul Majid
,, T.G. Anandasami, Delhi
,, Akkarai Ramaier
,, A. Chakravarthi
,, T.C.GopalakrishnaChetti
,, K.R.Krishnamurthi Iyer
,,P.P.KrishnamurthiChetti
,, T. S. Krishnamurthi Iyer
,, Mottayan Chetty
,, D. R. Nagoji Rao
,, M R. Natesa Iyer
,, K. Natesan
,, A V.Y Narayanan, Delhi
,, T. S. Parthasarathi
,, K. Ragavendra Rao
,, Muthuvenkata Rajulu
,, K. R. Regunatha Rao
,, A. R. Rajagopala Chetti
,, K. V. Ramam (Barsi)
,, A. S. Ramanatha Iyer
,, V. Ramanathan
,, K. N. Rama Rao
,, Diwan Bahadur
K. S. Ramasami Sastri
,, M. N. Sambamurthi
,, S. S. P. Saminathan
,, T. B. Seetharam
,, M. S. Sowrirajan
,, Venkatarama Sastrigal
,, K C. Veeraragava Iyer
,, R. Govinda Rao
,,Pro. K. Sundararama Iyer
,, Ramamurthi
,, N. Bhima Rao
,, A. M. R. David
,, K. Gopalan
,, M. V. Thiyagaraja Iyer
,, Venkataraman B. A.,

Mr. N. Krishnamurthi Iyer
,, V. Krishnan, Bombay
,, P. R. Krishnamurthi
,, A. V. Krishnasami
,, Muthusami Iyer
,, Narayanasami Iyer
,, Ramachandra Rao
,, C. S. Reghunathachari
,, M. K. Sambasiva Iyer
,, T. V. Sankaran (Madras)
,, Sivagurunatha Pillai
,, S. Subramania Iyer
,, A. Subramania Iyer
,, A. V. Subramania Iyer
,, K. K. Subramania Iyer
,, Sundararajan Bombay
,, C. S. Swaminathan
,, K. S. Veeraragava Iyer
,, T. V. Vaidyanatha Iyer
,, K. S. Venkatachelamaier
,, V.S. Venkataraman & Co.
Srimathi K. Chellammal
,, Padmavathi Bai
,, Ranjitham Davis
,, Rukmani, Madras
,, Saradambal
Mr. M. A. Kuttalingam
,, Rajagopala Iyer
,, Saranatha Ayyangar
,, Sankaralinga Iyer
,, N. M. Sundaram
,, N. Thiruvengadathan
,, K. S. Vaidyanatha Iyer M.A., L.T.,
,, Sivaramakrishna Iyer
,, P.T.S.K. Tyagarajan
,, Semmangudi Sreenivasa Iyer

1937 PATRONS.

Mr. A. K. Sundaram Ayyar, Advocate, Tinnevelly.

,, K. S. Sundararama Ayyar,
Retired Professor, Kumbakonam.

,, K. V. Ram, Belur Mutt, Calcutta.

,, S. Neelakanta Sastri, District Munsif, Vellore.

,, C. Rajagagopala Ayyar,
Additional Sessions Judge, Vellore.

,, T. S. Krishnasami Ayyar, College Lecturer,
Kumbakonam.

,, K. R. Krishnamoorthy Ayyar,
Native High School, Kumbakonam.

WORKS
(In Tamil)

BY

K. KUPPUSAMI,

In Print.

Indira the Chaste, Rajaratnam, Veera Abhimanyu, Tukaram Bava and Mohan Lelea.

MANUSCRIPTS

DRAMAS

Ramayana Series :—Valmiki the hunter, Rishyasringa Ahalya, Seetha, Paduka, Seetha Apaharan, The Ring and the Abhaya, Sathi Sulochana, Pattabisheka, Lava-Kusa or Seetha Vanavas, Baktha Mahima or Sakuntha, Ravana Mahima or Mathru Bakthi.

Other works :—Sree Ramakrishna, Tyageer, Bheeshma Manimekala, Purandaradas, Rajasuya, Vikrama Sthreesahasam, Vipranarayana, Gopichand, Kalidas, Nandanar

Social :—Girija or Giribala, Amar Singh, Gourichandra, Paradesi, Ammanji Asamanja, Siama or Syamala, Jayabhuvanam, Indulabala.

Historical :—Sivaji, Fall of Vijayanagar, Fall of Chenji Kunala or Asoka's son.

TRANSLATIONS AND ADAPTATIONS OF TAGORE.

Ama and Vinayaka, Karna and Kunthi, Kacha and Daivayani, Ghandari and Dhritarashtara, The King and the queen, Sacrifice.

BIOGRAPHY.

Mahan Govinda Dikshit.